GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5A**

**6030–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the general rules for calculation of limitation periods.
காலவரையறை காலத்தை கணக்கிடுவது குறித்த பொது விதிகளை விளக்குக.

2. Define Res Judicata. Explain its importance in civil proceedings.
முன் தீர்ப்புத் தடையை வரையறை செய்க. உரிமையியல் நடைமுறையில் அதன் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

3. Explain the grounds for filing revision petition before the High Court.
உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்வதற்கான காரணங்களை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the powers of the first appellate court.
முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை பற்றி விளக்குக.

5. Enumerate the essential requisites of written statement under CPC, 1908.
உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908-இல் கூறப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் முக்கிய கூறுகளை தொகுத்து எழுதுக.

6. Elucidate the rules regarding Interpleader suits under Civil Procedure Code, 1908.
1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இடைப்பாத்திய வழக்கு தொடர்பான விதிகளை தெளிவுபடுத்தவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Receiver

உடைமைக் காப்பாளர்

(b) Counter Claim

எதிர் பாத்தியம்

(c) Reference

மேற்கோள் விசாரணை

(d) Restitution

மீட்டளிப்பு

(e) Decree

தீர்ப்பாணை

(f) Easements by prescription.

நீடனுபோகம் வாயிலாக வசதியுரிமைகள்

(g) Interim Injunction

இடைக்காலத் தடை ஆணை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ramesh lets a house to Kumar at an annual rent of Rs. 8000/-. The rent for the whole of the years 2020, 2021 and 2022 is due and unpaid. Ramesh sues Kumar in 2023 only for the rent due for 2022. Can he file another suit against Kumar for the rent due for 2020 and 2021?

இரமேஷ் என்பவர் தனக்கு சொந்தமான வீட்டை குமார் என்பவருக்கு வருட வாடகைக்கு ரூ. 8,000த்திற்கு கொடுத்துள்ளார். வருடங்கள் 2020, 2021 மற்றும் 2022 ஆகியவைகளுக்கான வாடகை நிலுவையில் உள்ளது. இரமேஷ் 2022-ஆம் ஆண்டு வாடகைக்காக மட்டும் 2023-ஆம் ஆண்டில் வழக்கு தொடருகிறார். பின்னர் மற்றொரு முறை 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான வாடகை பாக்கிக்காக வழக்குத் தொடர இயலுமா?

9. Ravi sues Basu and obtains a decree against him. Ravi applies for execution of his decree against Basu, but dies during the pendency of the execution proceedings. State whether execution petition will continue or abate.

இரவி அவர்கள் பாசு என்பவருக்கு எதிராக வழக்கிட்டு தீர்ப்பாணை ஒன்றைப் பெறுகிறார். தீர்ப்பாணையின் பொருட்டு இரவி அவர்கள் பாசு என்பவருக்கு எதிரான நிறைவேற்று மனு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது இரவி அவர்கள் இறந்துவிடுகிறார். நிறைவேற்று மனு தொடருமா அல்லது முடிவுக்கு வருமா என்பதைக் கூறவும்.

10. Chandru sues Karthik on a promissory note for Rs.85,000/-. Karthik already holds a judgment against Chandru for Rs. 82,000/-. A plea of set off is raised by Karthik. Can he succeed in his plea. Give reasons.

சந்துரு அவர்கள் கார்த்திக் என்பவர் மீது கடன் ஒப்புச் சீட்டின் அடிப்படையில் ரூ. 85,000 தர வேண்டும் என வழக்கிடுகிறார். கார்த்திக் என்பவர் ஏற்கனவே சந்துரு அவர்கள் தனக்கு ரூபாய் 82,000 தர வேண்டும் என தீர்ப்பு வைத்து எதிரிடை வாதம் செய்கிறார். அவர் அந்த வாதத்தில் வெற்றி பெறுவாரா? காரணங்களைக் கூறுக.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5B** **6031-24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the term "Judgment". What are the essential particulars of a Judgment? Can a Judgment be altered after its pronouncement?

   "தீர்ப்பு" என்ற பதத்தினை விளக்குக. தீர்ப்பு ஒன்றில் அடங்கி இருக்க வேண்டிய முக்கிய ஆக்கக் கூறுகள் என்ன? தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர், அதனை மாற்ற முடியுமா?

2. Examine the procedure for recording FIR and explain briefly its evidentiary value in a Criminal Trial.

   முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்குண்டான நடைமுறை பற்றி ஆராய்ந்து, குற்ற வழக்கு விசாரணையில் அதன் சான்று மதிப்பினை சுருக்கமாக விளக்குக.

3. What are the salient features of the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015?

   இளவர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ன் முக்கிய சிறப்பம்சங்கள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Describe the provisions of Criminal Procedure Code with regard to security for keeping the peace and for good behaviour.

   அமைதியைக் காப்பதற்கும், நன்னடத்தைக்குமான பிணையம் குறித்து குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் வகைமுறைகளை விளக்குக.

5. Explain the importance and scope of the right of the accused to be defended by a counsel of his choice. What provisions have been made in the code to enable an indigent accused to exercise his rights?

தன் விருப்பத்திற்கு ஏற்ப வழக்குரைஞரை நியமனம் செய்வதற்கு குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு உள்ள உரிமையின் இயல்பையும் முக்கியத்துவத்தையும் விளக்குக. வரிய நிலையில் உள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர் இவ்வுரிமையை பயன்படுத்துவதற்கு உள்ள சட்ட வகைமுறைகள் யாவை?

6. Explain the power of court to release certain offenders on probation of good conduct.

சிலவகைக் குற்றவாளிகளை நன்னடத்தைக் கண்காணிப்பின் பேரில் விடுதலை செய்ய நீதிமன்றத்திற்குள்ள அதிகாரத்தை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Complaint

குற்றமுறையீடு

(b) Compensation to the victim

பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு

(c) Reference

மேல்முடிவுக்கு அனுப்புதல்

(d) Police diary

காவலர் நாட்குறிப்பேடு

(e) Habitual offender

வழக்கமான குற்றவாளி

(f) Child in Conflict with law

சட்டத்துடன் முரண்பட்டுள்ள குழந்தை

(g) Admonition

மன்னித்து விடுதலை

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An offence is punishable with 5 years imprisonment. The criminal court takes cognizance of the offence after the expiry of four years. Can the court do that?

ஒரு குற்றத்திற்கு அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் தண்டனை விதிக்கலாம் என கூறப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றம் நான்கு ஆண்டுகளுக்கு பிறகு அக்குற்றத்தை புலன் கொள்கிறது. குற்றவியல் நீதிமன்றம் அவ்வாறு செய்யலாமா?

9. A magistrate of the first class tenders pardon to an accomplice at the stage of Investigation. Discuss the validity of the order passed by the Magistrate.

ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர் புலன் விசாரணை நடைபெறும் காலத்தில் உடன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு மன்னிப்பு அளிக்கிறார். குற்றவியல் நீதித்துறை நடுவர் பிறப்பித்த ஆணையின் செல்லுந்தன்மையை விவாதிக்க.

10. "A" and four others were prosecuted for the alleged offences punishable under Sections 147, 341 and 323 of IPC. The Informant/Injured filed a petition under Section 320 of Criminal Procedure Code before the court, where the proceedings has been pending for trial. Can it be entertained by the trial court.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 341 மற்றும் 323-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களை புரிந்ததாக "அ" மற்றும் நால்வர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தின் முன்பு செயல்முறைகள் நிலுவையில் இருக்கும் போது காயமுற்றவர்/தகவலர், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு -320 ன் கீழ் மனு ஒன்று தாக்கல் செய்தார். அம்மனு விசாரணை நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**TA5C**

**6032-24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE ( SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

**ENVIRONMENTAL LAW**

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Right to wholesome environment is a fundamental right" - Discuss the cases decided by National Green Tribunal.

   "நலந்தரும் சூழலுரிமை அடிப்படை உரிமையாகும்" – தேசிய பசுமை தீர்ப்பாயம் தீர்மானித்த வழக்குகளுடன் விவாதிக்க.

2. Discuss the impact of climatic change on coastal environment.

   கடலோர சுற்றுச்சூழலில் தட்ப வெப்ப மாற்றங்களின் விளைவுகளை விவாதிக்க.

3. Enumerate the laws to preserve and conserve the forest resources and biodiversity.

   பல்லுயிர் பெருக்கம் மற்றும் காடுகளின் வளங்களைக் காப்பதற்கு மற்றும் பேணுவதற்குரிய சட்டங்களை வகைப்படுத்துக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the object of the Public Liability Insurance Act 1991, with reference to cases.

   பொதுப் பொறுப்படைவு காப்பீட்டுச் சட்டம், 1991-ம் ஆண்டின் நோக்கங்களை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விளக்குக.

5. Discuss the reasons for depletion of groundwater resources.

   நிலத்தடி நீர் வளங்கள் குறைவதற்குரிய காரணங்களை விவரிக்க.

6. Discuss the significance of the Rio Declaration 1992 in achieving environmental sustainability.

வளங்குன்றா வளர்ச்சியை அடைவதில் ரியோ விளம்புகை 1992ன் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Taj Mahal Case

தாஜ் மஹால் வழக்கு

(b) Rain water Harvesting

மழை நீர் சேகரித்தல்

(c) Recycled Plastics

மறுசுழற்சி நெகிழி

(d) Land Resource Management

நில வள மேலாண்மை

(e) Noise Pollution

ஒலி மாசு

(f) National Park

தேசிய பூங்கா

(g) Public Participation

பொது மக்கள் பங்கேற்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Fishermen were imposed a ban to fish during breeding season. The fishermen filed a case on the ground that their fundamental right is threatened - Decide.

மீன் இனப்பெருக்க காலத்தில் மீன் பிடிப்பது தடை செய்யப்பட்டது. இது தங்கள் அடிப்படை உரிமையை அச்சுறுத்துவதாக இருப்பதாக மீனவர்கள் வழக்கு தொடர்ந்தனர். தீர்மானிக்கவும்.

9. 'A' hospital with 100 beds facility did not have incinerators to treat the bio-medical waste. 'Awareness' NGO group filed a case against the hospital on the ground that it violates Biomedical Waste rules - Decide.

'அ' மருத்துவமனை நூறு படுக்கை வசதிகளை கொண்டது. அம்மருத்துவமனையில் உயிர் மருத்துவ திட கழிவுகளை பண்டுவம் செய்ய எரியூட்டி உபகரணங்கள் அமைக்கப்படாமல் இருந்தது. இது நடைமுறையில் உள்ள உயிர் மருத்துவ திட கழிவு விதிகளை மீறுவதாக உள்ளது என்று மருத்துவமனையை எதிர்த்து "அவேர்னஸ்" என்ற அரசுசாரா அமைப்பு வழக்கிட்டது. தீர்மானிக்க.

10. The Government vehicles were using multi tones horns and sirens. The sound emitted by these horns are above the standard levels and not regulated. 'A' files a case before National Green Tribunal on the ground that State Government vehicles pose threat to human health - Decide.

அரசு வாகனங்கள் பல்லொலி எழுப்பும் ஊதுகுழல்களை பயன்படுத்தின. இதில் இருந்து எழுப்பப்படும் ஒலி இலக்களவையை விட அதிக அளவில் ஒலி எழுப்புகின்றது எனவும் அவ்வொலியை ஒழுங்குப்படுத்தவில்லை எனவும் இந்நிகழ்வுகள் மனித நலத்திற்கு அச்சுறுத்தும் செயல் எனவும் 'அ' என்பவர் மாநில அரசுக்கு எதிராக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கிட்டார். தீர்மானிக்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**TA5D**

**5992–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three – year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the term "accident arising out of and in the course of employment" – Refer to recent cases.

   "பணியின் மூலம் மற்றும் பணிபுரியும் போது ஏற்படும் விபத்து" என்ற பதத்தை விளக்கி, சமீபத்திய வழக்குகளை எடுத்துரைக்க.

2. Explain the various benefits provided to workers under the Employee's State Insurance Act, 1948.

   1948-ம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் படி, தொழிலாளர்களுக்கு கிடைக்கக் கூடிய பலன்களை விளக்குக.

3. Define factory and discuss the safety measures recommended under the Factories Act, 1948.

   தொழிற்சாலை என்பதனை வரையறுத்து, 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்புக்கான விதிமுறைகளை விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define 'Bonus'. Explain the procedure under the Payment of Bonus Act, 1965, for calculating the Bonus.

   'மீதூதியம்' வரையறு. மீதூதியம் வழங்கல் சட்டம் 1965-ன் கீழ் மீதூதியம் கணக்கிடுவதற்கான முறை குறித்து விவரி.

5. Explain the determination of gratuity under the Payment of Gratuity Act, 1972.

பணிக்கொடை நிர்ணயித்தல் பற்றி பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972-ன் கீழ் விளக்குக.

6. Explain the opening and closing hours of shops under the Tamil Nadu, Shops and Establishments Act, 1947.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-ன் கீழ் கடைகளை திறப்பதற்கும் மூடுவதற்கும் உள்ள நேரத்தை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Occupational diseases.

தொழிற் சார்ந்த நோய்கள்.

(b) Set on and Set off.

ஒதுக்கீடு செய்தல் மற்றும் எதிரீடு செய்தல்.

(c) Seasonal factory.

பருவ கால தொழிற்சாலை.

(d) Employee's Provident Fund Organisation.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி.

(e) Working hours of adults.

வயதுவந்த தொழிலாளர்களுக்கான வேலை நேரங்கள்.

(f) Forfeiture of gratuity.

பணிக்கொடை பறிமுதல்.

(g) Eligibility for Maternity benefit.

மகப்பேறு நலன் பெறுவதற்கான தகுதி.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ramu working in a Textile Mill, due to sickness he consumed alcohol and went for duty. While in the mill, he met with an accident and died. His widow claimed compensation from the textile mill. Is employer liable to pay compensation? Decide.

ராமு ஒரு துணி நூற்பாலையில் வேலையில் இருந்தார். உடல் உபாதையால் மது அருந்தி விட்டு வேலைக்கு சென்றார். தொழிற்சாலையில் வேலையின் போது விபத்தில் சிக்கி இறந்து விடுகிறார். அவரது மனைவி பணியாண்மையாளரிடமிருந்து இழப்பீடு கோருகிறார். அவர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரா? தீர்மானிக்க.

9. Suruthi working in a Tea estate adopted a 6 months old child and after adoption she gave notice to the employer and claimed maternity benefit. Decided whether she is eligible for maternity benefit (or) not?

சுருதி ஒரு தேயிலை தோட்டத்தில் பணியாற்றி வந்தார். அவர் 6 மாத குழந்தையை தத்தெடுத்து விட்டு பின் தன் முதலாளியிடம் அறிவிப்பு மூலம் மகப்பேறு உதவிகளை கோருகிறார். அவர் மகப்பேறு நலன்களை பெற தகுதியுடையவரா? இல்லையா? தீர்வு காண்க.

10. Selvam is employed as a clerk in a factory. Due to violent behaviour, he was terminated from the service. Before termination, he completed 9 years of service. He claimed gratuity and the factory management refused. Decide.

செல்வம் தொழிற்சாலையில் எழுத்தராக பணிபுரிந்து வருகிறார். அவர் தொழிற் சாலையில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் பணியிலிருந்து நீக்கப்படுகிறார். பணி நீக்கத்திற்கு முன் அவர் 9 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். அவர் பணிக்கொடை கோர, அதை தொழிற்சாலை நிர்வாகம் மறுக்கிறது. முடிவு காண்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**TA5E**

**6033–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. When is a sale or purchase said to take place in the course of interstate trade or commerce? Explain with decided cases.

   எப்பொழுது சரக்குகளின் விற்பனை அல்லது வாங்குதல் மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரம் அல்லது வர்த்தகமாகக் கருதப்படுகின்றது? தீர்வு செய்யப்பட்ட வழக்குகள் மூலம் விளக்கவும்.

2. Explain how income under the head profit and gains of Business or Profession is completed for being chargeable to Income-Tax Act.

   வருமான வரிச்சட்டத்தின் கீழ் வியாபாரம் அல்லது தொழிலில் வரும் இலாபங்களும் ஆதாயங்களும் என்ற தலைப்பின் கீழ் வரி விதிக்கத்தக்க வருமானத்தை கணக்கிடுக.

3. Explain the concept of import and imported with reference to the provisions of the Customs Act, 1962.

   சுங்கவரிச் சட்டம் 1962ன் கீழ் இறக்குமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பான கருத்துப் பற்றிய பிரிவுகளை விவரமாக விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define Tax. What are the canons of taxation?

   வரி என்றால் என்ன? வரியின் குணாதிசயங்கள் மற்றும் வரிக்கொள்கையை விளக்குக.

5. Explain the power to grant exemption from duty under the Customs Act, 1962.

1962ம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் கீழ் வரி விலக்கு அளிக்கும் அதிகாரங்களை விளக்குக.

6. Explain any twelve exempted income under the Income Tax Act, 1961.

வருமான வரிச்சட்டம் 1961ன் கீழ் ஏதாவது பன்னிரண்டு விலக்களிக்கப்பட்ட வருமானத்தை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Perquisites

மேலூதியங்கள்

(b) Tuition fees paid for Children

குழந்தைகளுடைய கல்விக் கட்டணத்திற்கு செலுத்திய தொகை

(c) Income from other sources

பிற மூல வருமானம்

(d) Person

நபர்

(e) Residential status of an Individual Tax Payer

ஒரு தனிநபரின் குடியிருப்பு நிலை

(f) Kinds of Duty

பல்வேறு சுங்க வரிகளின் வகைகள்

(g) Composite Supply

கூட்டு வழங்கல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of Law. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Ansarilal received annual H.R.A. 96,000, his Basic pay and Dearness Allowance is Rs. 8,80,000. He paid rent as 24,000 per month. Determine the taxable House Rent Allowance of Mr.Ansarilal for the Assessment Year 2024-2025. He resides in Chennai.

திரு.அன்சாரிலால் வருடாந்திர வீட்டு வாடகைப் படியாக ரூபாய் 96,000 பெற்றுள்ளார். அவருடைய அடிப்படை சம்பளம் மற்றும் அகவிலைப்படியும் சேர்ந்து ரூபாய் 8,80,000. அவர் ரூ.24,000 மாதம் வாடகையாக செலுத்துகிறார் எனில் வரிவிதிக்கக்கூடிய வீட்டு வாடகை தொகையினை 2024-2025ம் மதிப்பீட்டு ஆண்டிற்கு கணக்கிடுக. அவர் சென்னையில் வசித்து வருகிறார்.

9. Mr. Niranjan who is an employee of Central Government retires on 31.12.2023. He gets $\frac{1}{3}^{rd}$ of his pension commuted for Rs.25,00,000. Compute the exempted amount of pension.

திரு. நிரஞ்சன் மத்திய அரசின் ஊழியர். அவர் 31.12.2023ல் பணி ஓய்வு பெறுகிறார். அவர் தனது ஓய்வூதியத்தில் 1-3 பங்கு ரூ.25,00,000 ஓய்வூதிய தொகையாக பெறுகிறார். அவரின் வரி விலக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதிய தொகை எவ்வளவு?

10. An importer imports Car from New York. After paying import duty and obtaining clearance finds that the imported goods are defective and seeks refund of imports duty which was denied by the Assistant Commissioner of Customs. Advise the importer.

நியூயார்க்கிலிருந்து ஓர் இறக்குமதியாளர் கார் ஒன்றினை இறக்குமதி செய்கிறார். அவர் சுங்கவரி செலுத்தி அனுமதிப் பெற்று சரக்கை வெளிக்கொணரும்போது அவைகள் பழுதடைந்து உள்ளதைப் பார்த்து, தான் செலுத்திய சுங்க வரியை திரும்ப கோருகிறார். அதை சுங்கவரி துறை உதவி ஆணையர் மறுக்கிறார். அந்த இறக்குமதியாளருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

————————